Written by
புதன்கிழமை, 16 மே 2012 08:10 - Last Updated ஞாயிற்றுக்கிழமை, 17 ஜூன் 2012 07:50

There are no translations available.
□□□□□□

"டார்லிங், நாம ஊரவிட்டு ஓடிப்போற விஷயம் எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சே எப்படி?
" சந்தோஷத்துல என் புருசன் தண்ணியடிச்சுகிட்டு யார்கிட்டயாவது சலம்பியிருப்பார்!"

******************************

நகர் வலம் போவதாகச் சொல்லிவிட்டு மன்னர் அந்தப்புரத்தை சுற்றி சுற்றி வருகிறாரே!''
'' இது பிகர் வலமாம்!''
ஆனந்த விகடன் வார இதழில் வெளிவந்தது.

******************************

'' எப்பிடியோ ஒருவழியாக புறமுதுகிட்டு ஓடி தப்பித்து வந்து விட்டீர்கள் மன்னா!''
'' அது இருக்கட்டும், அசந்து தூங்கிகிட்டு இருந்த என்ன போர்க்களத்துக்கு

Written by
புதன்கிழமை, 16 மே 2012 08:10 - Last Updated ஞாயிற்றுக்கிழமை, 17 ஜூன் 2012 07:50

தூங்கிகிட்டு போனது யாரு?''
ஆனந்த விகடன் வார இதழில் வெளிவந்தது.

************************

ஆனி போய் ஆடி போய் ஆவணி வந்தா அவன் டாப்பா வருவான்!''

அவன் டூப்பாதான் வருவான், பாரு இப்பவே சினிமாவுல வர்ற சண்டைக்காட்சிகள விடாம பார்க்கிறான்!''

****************

`` சில பேருக்கு தூக்கத்துல நடக்குற வியாதி வரும், ஆனா நம் மன்னருக்கு வேற மாதிரி வியாதி வந்திருக்கு!''

`` என்ன வியாதி?''

`` தூக்கத்துல ஓடுற வியாதி!''

****************

``மன்னா தங்களின் மிக நளினமான ஓட்டத்தைக் காண எதிரி மன்னனுக்கு ஆசை வந்துவிட்டது!''

`` என்ன அமைச்சரே சொல்கிறீர்!''

`` எதிரி மன்னன் படையெடுத்து வருவதாக ஓலை அனுப்பியிருக்கிறான் மன்னா!''

****************

`` மன்னா எதிரி மன்னன் படையெடுத்து வருகிறான்!''

`` மன்னருக்கு இப்போ பி.பி,சுகர் ரொம்ப அதிகமா இருக்காம் ஆனி போய் ஆடிபோய் ஆவணி வந்தா உடல்நிலை சரியாயிடும் அப்போ படையெடுத்து வந்தாப்போதுமுன்னு

Written by
புதன்கிழமை, 16 மே 2012 08:10 - Last Updated ஞாயிற்றுக்கிழமை, 17 ஜூன் 2012 07:50

போய்ச்சொல்லு!''

****************

அமைச்சரே நான் புறமுதுகிட்டு ஓடி வருவது ஒருபுறம் இருந்தாலும் நம் அரண்மனைக்குள் நுழையும்போது தாரை தம்பட்டை அடித்து என்னை வரவேற்பதுபோல் ஒரு சித்திரம் வரையவேண்டும்!''

``எதற்க்கு மன்னா!''

`` வரலாறு மிக முக்கியம் அமைச்சரே!''

****************

`` அமைச்சரே வாழ்க்கையில் ஒருமுறையாவது எதிரி மன்னனை வெல்லவேண்டும்!''

`` இதுக்கு ஆசையைப்பாரு!''

****************

" நடிகை லட்சுமிராய்யைப் பார்த்து டோனி விழுந்து விழுந்து சிரிக்கிறாரே! ஏன்?"

" கிரவுண்ட விட்டு வெளியே போன பால தூக்கி போடுன்னு சொன்னதுக்கு அரோமா பாக்கெட் பால தூக்கி போட்டுட்டாங்களாம்!"

***************

”எதுக்கு எதுக்கு இலவசமுன்னு விளம்பரம் பண்றதுக்கு ஒரு விவஸ்தையே இல்லாமப்போச்சு!”

” ஏன் என்னாச்சு!”

நடிகை நமீதாவோட படத்தப் பார்த்தா கனவுல இலவசமா வருவாங்கன்னு விளம்பரம் பண்ணுறாங்க!”

***************

“ உன்ன எங்க வீட்டு ராணி மாதிரி வச்சுக்குவேன்னு தலைவர் சொன்னத நம்பி ஏமார்ந்துட்டேனே!”

” ஏன் என்னாச்சு!”

” ராணியிங்கற பொண்ணு அவர் வீட்டு வேலக்காரிடீ !”

***************

‘‘ பதவியில இருக்கிறப்போ பலரையும் சுரண்டி வாழ்ந்த நம்ம தலைவர் இப்போ என்ன பண்ணிகிட்டு இருக்கார்?”

‘‘ செல்போன் ரீ -சார்ஜ் கார்ட் சுரண்டிகிட்டு இருக்கார்.”

***************

"காலங்காத்தால பல்பொடி கம்பனி முன்னால எதுக்கு எல்லாரும் வரிசையா நிக்கறாங்க?"

" பல்பொடி விற்கப்படும்முன்னு எழுதுறதுக்கு பதிலா பால்பொடி விற்கப்படும்முன்னு எழுதியிட்டாங்களாம்!"

***************

" நான் கட்டிக்கப்போற பொண்ணுக்கு அண்ணன் தம்பி கிடையாது, இருந்திருந்தா என்ன மச்சான்னு கூப்பிட்டிருப்பாங்க!"

" நடிகை நமீதாவ கட்டிக்க, அவங்களே உன்ன மச்சான்னு தாராளமா கூப்பிடுவாங்க!"

***************

" இந்த படத்துல நீங்க கொஞ்சம் கூட நடிக்கவே இல்ல!"

" கதை யதார்த்தமுன்னு சொன்னாங்க, அதுல எப்பிடி நடிக்க முடியும்

***************

“ திரும்ப வந்த என் கால்ல விழுந்து பீரோ சாவி தர்றீயே ஏன்?”

“ நீங்க தானே மரியாதையா பீரோ சாவிய குடுன்னு கேட்டீங்க

***************

"மன்னர் ஏன் புலவரை நையப் புடைக்கிறார்?"
" கொற்றவா, புறமுதுகிட்டு ஓடிவர கற்றவான்னு பாட்டு எழுதி வந்துட்டாராம்!" ******
" நிலவுல நாம எப்போ போகப்போறோமுன்னு மன்னர் அடிக்கடி கேட்கிறாரே ஏன்?"
" எதிரி மன்னன் கிட்டயிருந்து தப்பிச்சு கொஞ்ச நாள் அங்க போய் ஒழிஞ்சிருக்கலாமுன்னுதான்!" ****************
" மன்னா இந்த முறை போர்களத்துலயிருந்து புறமுதுகிட்டு ஓடிவந்து தப்பிக்க முடியாது!"
" ஏன் முடியாது?"
" எதிரி மன்னன் இந்த முறை நம் அரண்மனை முன்பு போர்க்களம் அமைக்க திட்டமிட்டுள்ளானாம்" ******************
" மன்னா எதிரி மன்னன் சரேன் சங்குட்டுவன் ரொம்ப பொல்லாதவர், புறமுதுகிட்டு ஓடினால் அவரும் ஓடி வந்து தங்கள் தலையில் ணொங்கென்று கொட்டிவிடுவார்"
" அதனாலதான் அவர் பெயர் சரேன் சங்-குட்டுவனா!" **************
" இளவரசர் அந்தப்புரம் நுழையிறப்போ புது சினிமா பாட்டு பாடிகிட்டு போறாரே என்ன பாட்டு?"
" டாடி மம்மி வீட்டில் இல்ல, தட போட யாருமில்லங்கற பாட்டுத்தான்!" **************** " செய்தி ஓலை இப்படி கனக்கிறதே அப்படியென்ன அந்த புறமுதுகுப்புலி எழுதியுள்ளான்!"
" போரை தவிர்க்கவும்ங்கற சின்ன விசயத்த நிறயை அடித்தல் திருத்தலோட எழுதி முடிக்கிறப்போ ஓலை அதிகமாச்சு மன்னா!" *************** " நம் மன்னரின் கோபம் இன்னும் அடங்கவில்லை!"
" ஏன், என்ன நேர்ந்தது?"
" புறமுதுகிட்டு ஓடி வரும்பொழுது மன்னர் கால் இடறி விழுந்துட்டாராம், அவர தாண்டி ஓடுன வீரர்கள் யாரும் அவர கண்டுக்கலையாம்!" *************** " நம்ம மன்னருக்கு நாய் அடி, பேயடி, பாய் அடி கிடைச்சுதாம்!"
" அதென்ன பாய் அடி?"
" ஒருநாள் மட்டும் மகாராணிய பாயில படுக்கச் சொல்லீட்டு மன்னர் கட்டுல்ல படுத்தாராம், மகாராணி பாயாலே சாத்து சாத்துன்னு சாத்திட்டாங்களாம்!" ************** " மன்னா பஸ்ஸுலதான் ரிவேர்ஸ் வரமாட்டீங்க, போர்களத்திலயுமா, வாங்க ஓடியிடலாம்!"
" நல்ல வேளை ஞாபகப்படுத்தின, இந்தா ஓட ஆரம்பிச்சுட்டோமுல்ல!" ************* " நமது மன்னர் நடிகர் விஜய்ய சந்திக்கனுமுன்னு விருப்பப்படுறாரே ஏன்?"
" வில்லு மாதிரி வந்து எதிரி மன்னன போட்டுதள்ள முடியுமான்னு கேட்கிறதுக்குத்தானாம்!"
***************

"ஆற்காட்டார் கத்திய தூக்கிகிட்டு மீன் சந்தைக்கு போறாரே ஏன்?"
"மின்வெட்டு இருக்கிறப்போ மீன்வெட்டும் இருக்கட்டுமேன்னுதானாம்!" ************
*** "

தலைவர் ஏடாகூடமா கேள்வி கேட்டு வம்புல மாட்டிகிட்டாரு!"
"அப்படி என்ன கேட்டுட்டார்!"
"பிரிஞ்சிருந்த ரெண்டு குடும்பமும் ஒண்ணு சேர்ந்திடிச்சு, ரெண்டு டீ.வி எப்போ ஒண்ணு சேரப்போவுதுன்னு கேட்டுட்டாராம்!" ***************** "எதுக்கு அந்த காமெடி நடிகர ஹீரோயின் போட்டு அடிக்கிறாங்க?"
"தனக்கு சிக்ஸ் பேக் இருக்குன்னு சொல்றதுக்கு பதிலா செக்ஸ் பேக் இருக்குன்னு சொல்லீட்டாராம்!" *************** "எனக்கு புடிச்ச நடிகை ஷா ஷா ஷா ன்னு மூணு தடவ எழுதியிருக்கியே யாருப்பா அந்த நடிகை!"
"த்ரி-ஷா தான்"

"போஸ்ட் மாஸ்டர் பொண்ண காதலிச்சது தப்பா போச்சு!"
"ஏன் என்னாச்சு?"
"லேசா உரசினா ஸ்டாம்பு மாதிரி ஒட்டிகிறா!" ***************

''இப்பொழுது மழை எதுவும் இல்லை, பிறகெதுக்கு குடை ரிப்பேர் காரன் அரண்மனைக்குள் வந்துள்ளான்?''

''நமது வெண்கொற்றக் குடையிலிருக்கும் ஓட்டையை பார்த்திருப்பான் மன்னா!''

******************

''புற வழிச்சாலையின்னு அறிவிப்பு பலகை இருந்தத மாற்றி புறமுதுகுச்சாலையின்னு எழுதியிருக்கிறாங்களே! ஏன்?''

''வழக்கமா மன்னர் இந்த வழியாத்தான் புறமுதுகிட்டு ஓடி வருவாராம்!''

**************************

'' இருமலுக்கு டாக்டர் ஊசி போட்டப்போ லொக்கு லொக்குன்னு இருமுன தாத்தா நர்ஸ் நமீதா ஊசி போட்டதும் வேற மாதிரி இருமுறாரு!''
'' எப்பிடி?''
'' லக்கு லக்குன்னு இருகுறாரு''

********************************************************************************************************************